**ரஜ்கம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரஜ்கம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தன்னிச்சையாகப் புதுப்பிக்கப்படும் அடிப்படையில் முதலீடு செய்யப்பட்ட 05 நிலையான வைப்புகளுக்குரிய வட்டி கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூராட்சி ஓய்வதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய பங்களிப்புத் தொகையான ரூபா 13,645,635 கணக்கிலிடப்படவில்லை.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட 08 வாகனங்களது பெறுமதியும் ரூபா 602,208 பெறுமதியான 544 கவ்வனைஸ்ட் குழாய்களதும் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 02 வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 306,254 கூட்டுத்தொகை மற்றும் வேலைகளுக்காகப் பெறவேண்டிய ரூபா 106,260 மூலதன உதவியும் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின் பிடி ஆணைக் கட்டணம் மற்றும் தண்டப் பண வருவாய் ரூபா 2,080,317 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவினம் ரூபா 487,063 அதிகமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(எ) இலங்கை வங்கியின் 856 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் உள்ள வரவு மீதியாகிய ரூபா 395,266 ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டாது நடைமுறைச் சொத்துக்களுக்கு ஈடாக்கப்பட்டுக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 11,454,159 கூட்டுத்தொகையுடைய 08 கணக்கீட்டு விடயங்களுக்குரிய மீதிகளும் அவற்றுடன் ஒத்த துணைப் பதிவேடுகள், அறிக்கைகள் என்பவற்றின் மீதிக்குமிடையே ரூபா 13,543,756 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 தொங்கற் கணக்கு

முன்னைய ஆண்டில் ரூபா 636,821 கூட்டுத்தொகையாக இருந்த தொங்கற் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு, தேவையான சீராக்கலை மேற்கொண்டு அவற்றைத் தீர்த்து வைக்காமையால் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான வரவு மீதி ரூபா 2,980,281 வரை அதிகரித்திருந்தது.

### 1.3.5 பெறவேண்டிய கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 10,053,912 கூட்டுத் தொகையுடைய 05 பெறவேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 23,907,417 கூட்டுத்தொகையைக் கொண்டிருந்த 08 பெறவேண்டிய கணக்கு மீதிகள் என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.6 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 571,597 கூட்டுத்தொகையுடைய 02 கணக்கு மீதிகள் மற்றும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ரூபா 11,144,791 கூட்டுத்தொகையைக் கொண்டிருந்த 04 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.7 கணக்காய்விற்கான சான்றின்மை

காணி, கட்டிடங்கள், இயந்திரங்கள், இயந்திர மூலதனங்கள், மோட்டார் வாகனங்கள், கைவண்டிகள், தளபாடற்கள், கெபினெட் என்பவற்றினது கூட்டுத்தொகை ரூபா 34,741,112 ஆகும். இவற்றிற்கான நாளதுவரையாக்கப்பட்ட சொத்தின் வகுப்புகளுக்கேற்பத் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் பட்டோலையும், ரூபா 11,880,202 கூட்டுத்தொகையுடைய நூலகப் புத்தகங்கள், பொதுக் களஞ்சியம், நீர் வேலைகளுக்கான பொருட் கையிருப்பு, மின்சாரப் பொருட் களஞ்சியம், ஆயுர்வேத மருந்துக் களஞ்சியம் சம்பந்தமான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், பதிவேடுகளும் பட்டோலைகளும் ரூபா 1,869,964 தொகையுடைய கடன்பட்டோர் மற்றும் ரூபா 4,029,293 தொகையுடைய கடன்பட்டோர் மீதிகள் சம்பந்தமான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகளும் காலப்பகுப்பாய்வும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களும் ரூபா 7,115,498 தொகையுடைய நானாவித வைப்புகள் என்பன தொடர்பான வைப்புப் பதிவேடுகள் போன்ற சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 13.893,861 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,141,829 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 20,035,790 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

(அ) சபை ஆட்சேர்த்த ஊழியர்களது சம்பளத்தையும் படியையும் வழங்குவதற்கு சபையின் வருவாயிலிருந்து ரூபா 14,045,205 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மீணடுவரும் வருவாய்க்கு ஒப்பாக மீண்டுவரும் செலவினம் 88 முதல் 134 சதவீதம் வரை 46 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிலும் முன்னைய இரு ஆண்டுகளிலும் வருவாய்க்கான உதவி. சுயஉற்பத்தி வருவாய் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பன தொடர்பான பொழிப்புடனான விபரம் வருவாறு.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 41,185,849 | 33,953,372 | 7,232,477 | 55,079,810 | 47,847,333 |
| 2014 | 51,961,631 | 18,913,026 | 33,048,605 | 45,819,802 | 12,771,197 |
| 2013 | 37,978,557 | 12,922,046 | 25,056,511 | 44,270,617 | 19,214,106 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் மீண்டுவருஞ் செலவினம் தொடர்ந்து அதிகரிக்கும் வேகம் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்குள்ளாகி சபையின் சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவின அதிகரிப்பு நிலவியது.

(ii) வருவாய்க்கான உதவி கிடைக்காதுவிடின் சபையின் வருவாய் மூலம் மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்யக்கூடிய நிலைமை தென்படாததுடன், மீளாய்வாண்டில் மொத்த மீண்டுவரும் வருவாயிலும் கூடிய ரூபபா 13,893,961 மீண்டுவரும் செலவின அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(iii) வருவாயை அதிகரிப்பதற்குச் சபை கூடிய கவனம் செலுத்துவதுடன், அதற்கென முறையான நடைமுறைகளைத் தயாரித்து அமுலாக்காது போனால் நிதி முகாமைத்துவத்தின் நலிவான நிலைமை காரணமாக சபை தொடர்ந்து செயலாற்றுவது சிக்கலாகிவிடும் என்பது கணக்காய்வினது அபிப்பிராயமாகும்.

(ஈ) மீளாய்வாண்டின் உள்ளவாறான மூலதன வருவாய் ரூபா 2,327,928 ஆகும். உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 33,000 ஆகும். இதனால் மூலதனச் செலவினத்திலும் கூடிய ரூபா 2,294,928 மூலதன வருவாய் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் மூலதன வருவாய் ரூபா 16,620,000 ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 18,725,000 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தன. எனினும், மூலதன வருவாயிலும் கூடிய ரூபா 2,105,000 மூலதனச் செலவினத்திற்கு எவ்வாறு நிதி சேகரிக்கப்படும் என்பது விளக்கப்படவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 தீர்வையும் வரியும்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 10,795,713 நிலுவை மீதி மற்றும் 38 விலைப் பட்டியல் வழங்கப்பட்ட ரூபா 351,831 ஆகயவற்றில் 10 சதவீதமான குறைந்த பெறுமதியே அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் தீர்வை, வரியினது மீதி ரூபா 10,058,882 ஆவதற்கு அது காரணமாக அமைந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.2 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 676,535 நிலுவையில் எதுவுமே ஆண்டின்போது அறவிடப்படவில்லை. நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 6,549,214 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 12,745,039 பெறப்பட வேண்டியிருந்தன.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

### 3.1.1 பதவியணி முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணித்திட்ட அங்கீகாரத்திற்கு அதிகமாக 25 பேரும் அங்கீகரிக்கப்படாத பதவிகளில் 06 பேரும் என மேலதிக ஊழியர்கள் 31 பேர் இருந்தனர். ஆயினும், மேலதிகப் பதவியணியை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) ஆரம்ப மட்டத்தில் மேலதிகமாக இணைக்கப்பட்ட 05 வீதித் தொழிலாளர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர் ஒருவர் என்போர் இரண்டாம் நிலை முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

### 3.1.2 தீர்த்து வைக்கப்படாத முற்பணம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 87,500 கூட்டுத்தொகையுடைய முற்பணமானது 2016 செப்டம்பர் 6 ஆந் திகதியளவிலும் தீர்த்துவைக்கப்படுவதற்கான நடவடிக்கை இன்றி இருந்தது.

### 3.1.3 ஊழியர் கடன்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 1,557,558 ஆகும். இதில் மரணமடைந்த, இடமாற்றம் பெற்ற சேவை விஞ்சிய 07 ஊழியர்களது ரூபா 26,833 மீதியும் உள்ளடங்கியிருந்தபோதும், அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

சபைக்குரிய RS-1592 இலகப்க பெக்கோ இயந்திரம் வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதன் மூலம் மீளாய்வாணடில் ரூபா 96,097 வருவாய் பெறப்பட்டிருந்தது. எனினும், அவ்வருவாயை ஈட்டுவதற்கு ரூபா 344,901 எரிபொருள் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவிற்கு இணங்காத 03 சந்தர்ப்பங்களில் ரூபா 65,000 கூட்டுத்தொகையுடைய சபையின் நிதி விழாக்களுக்குச் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் குறித்த செலவுக்க அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான விதி முறைகடைப்பிடிக்கப்படாது தலைவரது மரணச் சடங்கிற்கு ரூபா 399,657 செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையானது மத்திய சுற்றாமல் அதிகாரச் சபை மற்றும் பிலிசறு செயற்திட்ட உதவியுடன் ரூபா 4,293,092 செலவழித்து மொன்ரோவியாவத்தை காணியில் ஆரம்பிதத்த திண்மக் கழிவுச் செயற்திட்டம் 2013 யூலை 01 ஆந் திகதி முதல் செயலற்று இருந்தது. இது தொடர்பாக 2016 சனவரி 19 அன்று மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திண்மக்கழிவுச் செயற்திட்டத்தின் கொம்போஸ்ட் உற்பத்தி நடவடிக்கைகள் 2013 முதல் நிறுத்தப்பட்டதால் ரூபா 599,000 பெறுமதியான 04 உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) கொம்போஸ்ட் பிரிவின் வாகனச் சாலையை நிர்மாணிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,548,520 செலவிடப்பட்டிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய 07 செலவின விடயங்களது ரூபா 35,709,062 கூட்டுத்தொகையில் சேமிப்பும் ஏனைய செலவின விடயங்களில் வரம்பிலும்கூடிய ரூபா 9,119,604 செலவினமும் 07 வருமான விடயங்களில் எய்தப் பெறாத ரூபா 28,514,279 வருவாயும் நிலவியதும் சுயஉற்பத்தி வருவாயில் 30 சதவீதம் மூலதனச் செலவின்திற்கு ஒதுக்கப்படாது போனமை என்பன காரணமாக வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/ந.வ.லே எனும் உள்ளுராட்சி ஆணையாளரின் (தென் மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(i) இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

#### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவவதுமான சொத்துக்கள்

சபைவளாகத்தில் துரப்பிடித்துவாறிருக்கும் 07 வாகனங்களைப் பழுதுபார்த்து உபயோகிப்பதற்கோ அல்லது அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கோ 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### (ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபை பயன்படுத்தும் 11 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.3 ஆம் பந்தியில் ‘‘அ’’ முதல் ‘‘ஓ’’ வரையான பந்திகள் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இணக்கம் ஏற்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் முடிவளவிலும் இணக்கப்பட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே விபரிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்
(ஊ) சொத்து முகாமைத்துவம்